9th September 1970]

DEPUTY CHAIRMAN : Questions 92 to 95 are postponed.

Modernisation of Cauvery Delta Irrigation Scheme

*96. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether it is a fact that a sum equal to Rs. 40 crores which being the aid by the World Bank for modernisation of Cauvery Delta Irrigation Scheme is proposed to be reduced from the plan allotment by the Government of India to the State ; and

(*b*) if so, whether the State Government has taken up the matter with the Government of India to make this as a special allotment ?

காவிரி கழிமுகப் பாசனத் திட்டத்தை நவீனப் படுத்தல்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) காவிரி கழிமுகப் பாசனத்திட்டத்தை நவீனப்படுத்துவதற்காக உலக வங்கியினால் அளிக்கப்பட்டு வரும் ரூ. 40 கோடிக்கு நிகரான தொகையை மத்திய அரசு மாநில அரசுக்குச் செய்யும் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து குறைக்கத் திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இதை ஒரு சிறப்பு ஒதுக்கீடாகச் செய்ய வேண்டுமென்று இந்திய அரசிடம் மாநில அரசு எடுத்துச் சொல்ல அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள பழைய காவிரி டெல்டாப் பகுதியை ரூபாய் 49 கோடி செலவில் புதுப்பிப்பதற்கான திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு மத்திய நீர் மின்சக்தி ஆணைக் குழுவின் வாயிலாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த 40 கோடி ரூபாய் உலக வங்கியிலிருந்து தஞ்சை ஜில்லா காவிரி கழிமுகப் பாசனத் திட்டத்திற்காக அளிக்கப்பட இருப்பதாக அறிகிறேன். ஆனால் இந்த 40 கோடி ரூபாயை மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்று நம் மாநிலத்திற்குப் பெற்றால், இதன் காரணமாக நமக்காக 5 ஆண்டுத் திட்டத்தில் கொடுக்க இருக்கிற பணத்திலிருந்து அதை மத்திய அரசினர் குறைத்து விடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இந்தத் திட்டம் இந்திய அரசிடம் முடிவுறாத நிலையில் இருக்கிறது. இது முடிவடைந்த பிறகு மத்திய நீர், மின்விசைக் குழுவின் அனுமதியையும் பெற்று அதற்குப் பிறகே நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக மத்திய அரசை அணுக முடியும். அந்தச் சமயத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

[9th September 1970

திரு. ஜி. சுவாமிநாதன் : நம் மாநிலத்திற்கும் மைசூர் மாநிலத்திற்குமிடையே காவிரி நீர்ப் பங்கீடு சம்பந்தமான வகையில் இருக்கும் பிரச்னை காரணமாக உலக வங்கி கொடுக்க இருக்கும் இந்த 40 கோடி ரூபாய் பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பாதிக்காது என்று தான் நாங்கள் கருதுகிறோம். பாதிக்கப்படக் கூடாது என்று தான் நாங்கள் விரும்புகிறோம்.

Superintending Engineers

*97. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the number of vacancies of Superintending Engineers in Highways and Rural Works Department that have not been filled as on date ;

(*b*) the period for which they are kept vacant ; and

(*c*) the reason therefor ?

மேற்பார்வைப் பொறியாளர் பதவிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இந்நாள் வரை நெடுஞ்சாலைகள்-கிராமப் பணித்துறையில் நிரப்பப்படாமலுள்ள மேற்பார்வைப் பொறியாளர் பதவிகள் எண்ணிக்கை என்ன ?

(இ) அவை எவ்வளவு காலமாகக் காலியாக உள்ளன ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) மூன்று.

(இ) மேற்பார்வைப் பொறியாளர் கோயம்பத்தூர் மாவட்டம்: 1-1-70 முதல் 2-7-70 பிற்பகல் வரை.

மேற்பார்வைப் பொறியாளர், (இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சென்னை) : 9-1-70 முதல் 17-6-70 பிற்பகல் வரை.

மேற்பார்வைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி : 10-5-70 முதல் 18-6-70 பிற்பகல் வரை.

(உ) 1970 பிப்ரவரியிலும், 1970 ஏப்ரலிலும் இந்த மேற்பார்வைப் பொறியாளர் பதவிகளை நிரப்புவதற்கான செயற்குறிப்புகளைத் தலைமைப் பொறியாளர் பணிந்தனுப்பினர். முகமையிலனுப்பப்பட்ட (on deputation) வேறு பணியிலிருந்து இத்துறை அதிகாரிகளிடமிருந்து தம்மைத் தாய்த்துறைக்குத் திரும்ப அனுப்புமாறு வேண்டிக்கொண்டு அனுப்பப்பட்ட முறையீடுகளுடன் சேர்த்து அச்செயற்குறிப்புகள் பரிசீலனையில் இருந்தன. இதில் ஏற்பட்ட காலதாமதம் நிர்வாகக் காரணங்களால் விளைந்ததாகும்.